1993 ஏப்ரல் 13]

சாலைகளுடைய நெருக்கமான பகுதிகளில் அமைவதற்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. அதே போல் சாதாரணக் கட்டிடங்கள் போல் அல்லாமல் பல அடுக்கு மாடிக் கட்டிடங்களுக்கு சுற்றிலும் விடப்பட வேண்டிய திறவிடங்கள், காரேஜ்கள் போன்ற திறவிடங்கள் குறைந்தது 7 மீட்டர் இருக்கவேண்டும். ஆகவே, இத்தகைய கட்டிடங்களால் கடற்காற்று சென்னை நகருக்கு வீசிட தடை ஏதும் இருக்க சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 337, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

337—

கண்பார்வையற்ற தம்பதிகளுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்குச் சலுகைகள்.

**11515 டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்:*

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா–

கண்பார்வையற்ற தம்பதியர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் வேறு சாதியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு ஆதிதிராவிட மக்களுக்கு அளிப்பதற்குச் சமமான சலுகைகள் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி, சமூக நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அப்படிப்பட்ட எண்ணம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண் பார்வை அற்றவர்கள் அன்றாடம் தங்களுக்குத் தேவையான பணிகளுக்கு என்றே இன்னொருவர் உதவி தேவைப்படுகிற நிலையில் இருக்கிறார்கள். அப்படிப் பார்வை அற்ற தம்பதிகள் மிக சிரமத்திற்கு இடையே பல பல எதிர்பார்ப்புகளோடு தங்களுடைய குழந்தைகளை வளர்க்கிறார்கள். அப்படிப் பார்வை அற்ற தம்பதிகள் உயர் ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தால் அவர்களுடைய குழந்தைகளுக்கு கல்வி, வேலைவாய்ப்பு, வேலைவாய்ப்புப் பயிற்சிகள், அரசுப்பணிகள் ஆகியவற்றில் வாய்ப்புகள் மிகக் குறைவாக இருக்கிறது. கண் பார்வை அற்ற தம்பதிகள் தங்கள் குழந்தைகள் நன்கு படித்து வேலை செய்து வயதான காலத்தில் தங்களைக் காப்பாற்றுவார்கள்

என்ற ஆசையோடு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையிலுள்ள கண் பார்வை அற்ற தம்பதிகளுடைய கனவுகள் மலர கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் பார்வை அற்ற தம்பதிகள் குழந்தைகளுக்கு என்று தனிச் சலுகை வழங்கிட அரசு ஆவன செய்யுமா என்றும், அப்படிப்பட்ட சலுகைகள் ஆதிதிராவிட மக்களுக்கு அளிக்கிற சலுகைகளுக்குச் சமமாகவோ அல்லது அதற்கு மேலான சலுகையாக இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனமுற்றோர் நலனுக்கான திட்டங்கள் யாவும் ஊனமுற்றோர் பயன் அடையும் வகையில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. அவர்களின் வாரிசுகளுக்கு அல்ல. கல்வி, சமூகநலம் மற்றும் பொருளாதார ரீதியாக மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ள ஆதிதிராவிடர் மக்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் கண் பார்வை அற்ற தம்பதிகளுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு அவர்கள் வேறு ஜாதியைச் சேர்ந்தவராக இருந்தாலும் வழங்க இயலாது. கண் பார்வை அற்ற தம்பதிகளுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு அந்தந்த ஜாதிகளுக்கு அளிக்கப்படுகின்ற சலுகைகளைப் பெற தடை ஏதும் இல்லை. கண் பார்வை அற்றவர்களுக்கு அதிக அளவு சலுகைகள் நம்முடைய தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அந்தச் சலுகைகளை அவர்களுடைய குழந்தைகள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண் பார்வை அற்ற தம்பதிகளுக்கு சலுகைகள் உள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுடைய வாரிசுகளுக்கு அல்ல என்று சொன்னார்கள். ஆனால் அந்தக் குழந்தைகளை வளர்த்து அந்தக் குழந்தைகளை ஒரு நல்ல நிலைக்குக் கொண்டு வருவதற்கு அந்தத் தம்பதிகள் எவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கிறது என்பதைக் கருணை உள்ளத்தோடு பரிசீலித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அதேபோல் கண் பார்வை அற்ற தம்பதிகளுக்குப் பிறக்கிற குழந்தைகளை வளர்ப்பதற்கு நம்முடைய மாநிலம் ஒரு முன் மாதிரியாக இருக்கிற வகையில் பார்வை அற்ற தம்பதிகளின் குழந்தைகளுக்கு என்று வளர்ப்பு இல்லங்கள் தமிழகத்தில் அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 13]

முற்பகல் 11.00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்பார்வை அற்றவர்களுக்கு அளிக்கப்படுகின்ற சலுகைகளில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே நம்முடைய சரித்திர நாயகியாம் தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவிதான் (மேசையைத் தட்டும் ஒலி) அதிக அளவிற்குச் சலுகைகளை வழங்கி இருக்கிறார்கள் என்பதைத் தெரியப்படுத்திக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, கண்பார்வை அற்றவர்களுடைய குழந்தைகளுக்கு மட்டும் சலுகை அளிக்கப்படவேண்டுமென்று சொன்னால் நாளைக்கு ஊனமுற்றவர்களுடைய குழந்தைகளுக்கும் அந்தச் சலுகைகளைக் கேட்பதற்குரிய வாய்ப்பு உண்டு. மனவளர்ச்சி குன்றியவர்களுடைய குழந்தைகளுக்கும் அந்தச் சலுகைகளைக் கேட்க வாய்ப்பு உண்டு என்கிற காரணத்தினால் இந்தக் கோரிக்கையைப் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ள இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 338, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

338—

பெரியபக்கலம் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளி

*9528 **திரு. கே. கந்தசாமி :**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் தலைவாசல் தொகுதி, பச்சைமலை ஊராட்சி பெரியபக்கலத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளியை ஆதிதிராவிடர் உறைவிடப் பள்ளியாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே நடைபெற்றுவரும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளை ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளாக மாற்றுவது தேவையற்றது என்று கருதப்படுகிறது.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பச்சைமலை ஊராட்சியில் ஒருங்கிணைந்த மலைவாசி மக்கள்